Ubin Tides

Issue 2
May-Oct 2018
PULAU UBIN

உபின் தீவின் சதுப்புநிலங்கள் புத்துயிர்ப்பெற உதவி

கடற்கரை அரித்துச் செல்லப்படாமல் பாதுகாத்து, பலதரப்பட்ட வனவாழ்வினங்களின் இருப்பிடமாகப் பயன்படும் உபின் தீவின் சதுப்புநிலக் காடுகள், கரையோர வட்டாரத்தின் முக்கிய பகுதியாகும். முன்பு, சதுப்புநிலக் காடுகளில் சில நீர் வேளாண்மை பகுதிகளாக மாற்றப்பட்டு, பிற்பாடு கைவிடப்பட்டன.

இப்பகுதிகளில் சதுப்புநிலக் காடுகளை உயிர்ப்பிக்க Restore Ubin Mangroves (R.U.M.) திட்டத்தை Friends of Ubin Network (FUN) 2014-ல் தொடங்கியது. தேசிய பூங்காக் கழகத்தின் ஆதரவுடன், அடித்தளத்தின் முனைப்பில் உருவெடுத்த இத்திட்டத்தில், உபின் தீவின் சதுப்புநிலக் காடுகள்மீது அக்கறைகொண்ட குழுக்கள் உள்ளடங்குகின்றன. அக்குழுக்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு, உபின் தீவின் சதுப்புநிலக் காடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை வளர்த்து, சதுப்புநிலங்களை உயிர்ப்பிப்பதன் தொடர்பில் ஆய்வுகள் நடத்துகன்றன.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ((NUS) புவியியல் பிரிவின் Mangrove Lab, சிங்கப்பூர் இயற்கை சங்கம், Sea Angels, WildSingapore போன்ற அமைப்புகளின் வல்லுநர்களையும் தொண்டூழியர்களையும் இத்திட்டம் ஒருங்கிணைக்கிறது. தேசிய பூங்காக் கழகமும் NUS புவியியல் பிரிவும் (R.U.M. சார்பில்), பூங்காக் கழகத்தின் நிதியளிப்புடன் 2016-ல் ஓர் ஆய்வைத் தொடங்கின. உபின் தீவின் சதுப்புநிலங்களை உயிர்ப்பிக்க Ecological Mangrove Restoration (EMR) எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதைப் புரிந்துகொள்வது ஆய்வின் நோக்கம். இந்த ஆய்வு சுங்காய் டுரியானை மையமாகக் கொண்டிருந்தது. அறிவியலை அடிப்படையாகக் கொண்ட EMR அணுகுமுறை, இடத்தின் இயல்புகளை (உயரம், நீரியல்) கவனத்தில் கொண்டு சதுப்புநிலத்தின் இயற்கையான மறுவளர்ச்சியைத் தூண்டும் சாதகமான சுற்றுப்புறச் சூழல்களை அமைத்துக் கொடுக்கிறது. ஆய்வின் ஒரு பகுதியாக, உபின் தீவிலுள்ள கைவிடப்பட்ட நீர் வேளாண்மை குளங்களும் அவற்றின் சுற்றுவட்டாரத்திலுள்ள சதுப்புநிலக் காடுகளும் ஆராயப்பட்டன. கைவிடப்பட்ட குளங்களின் உயரம் மிகவும் குறைவாக இருந்ததால் பெரும்பாலான சதுப்புநிலத் தாவரங்களால் வளர இயலாது என்பதை முடிவுகள் உறுதிப்படுத்தின. சுங்காய் டுரியானில் Sonneratia மரம் இயற்கையாக வளர்வதற்குப் பொருத்தமான உயரம் இருந்தபோதிலும், அப்பகுதியில் Sonneratia தாய் மரங்கள் போதிய அளவில் இல்லாததால், மரங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கு Sonneratia நாற்றுகள் இயற்கையாகக் கிடைக்கவில்லை.

கைவிடப்பட்ட குளங்களின் அலையேற்றச் சுழல் இயற்கையான அலையேற்றச் சுழலை ஒத்திருந்ததாக அலையேற்றத்தை அளவிடுவதற்காக நிறுவப்பட்ட அளவீட்டுக் கருவிகள் காட்டின. இந்த இடத்தில் எதிர்பார்த்த அளவுக்கு ஈரமட்டம் இல்லாததால், சதுப்புநிலக் காட்டின் வளர்ச்சி மீது அதிக பாதிப்பிருக்காது.

தேசிய பூங்காக் கழகம் நடத்திய பறவை ஆய்வு, கைவிடப்பட்ட குளங்களில் அலையேற்றம் குறைவாக இருந்தபோது ஒரே ஒரு கடலோரப் பறவை மட்டுமே உணவுண்ண வந்ததாகப் பதிவு செய்தது. எனவே, சதுப்புநிலக் காடுகளை உயிர்ப்பிக்கும் முயற்சியால் கடலோரப் பறவைகளின் பன்மயம் அதிகம் பாதிப்படையாது.

இந்த ஆய்வுகள் தவிர, உபினின் சதுப்புநிலக் காடுகளுக்கு EMR எந்த அளவுக்குப் பலனளிக்கும் என்பது பற்றிய கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. தேசிய பூங்காக் கழகம் 2018 பிப்ரவரி மாதம் நடத்திய பயிலரங்கும் இதில் உள்ளடங்கும். இந்நிகழ்ச்சியில், EMR வல்லுநரான பெஞ்சமின் பிரவுன் பல உட்கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார். பயிலரங்கின்போது வெளியிடப்பட்ட யோசனைகளில் சில பரிசீலிக்கப்பட்டு, சதுப்புநிலக் காடுகளுக்கு மறுவாழ்வளிக்கும் தொடர் முயற்சிக்குத் துணையாக அமலாக்கப்படலாம்.

சுங்காய் டுரியானில் நடத்தப்பட்ட உயர ஆய்வுகள் படம்: ரியா டான்

சுங்காய் டுரியானில் நடத்தப்பட்ட உயர ஆய்வுகள்
படம்: ரியா டான்

படம்: ஜெர்மேன் லெங்

உபின் தீவு பற்றி மேல்விவரம் அறிய, www.ubin.sg இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது nparks_pulau_ubin@nparks.gov.sg மின்னஞ்சல் முகவரியில் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Ubin Living Lab ஆய்வகத்தில் புதிய நடப்புகள்

2016 பிப்ரவரி மாதம் திறக்கப்பட்ட Ubin Living Lab ஆய்வகம், உபின் தீவின் தள ஆய்வுகள், சுற்றுப்புறக் கல்வி, சமூக எட்டுதல் ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த மையமாகத் திகழ்கிறது. ஆய்வாளர்கள், மாணவர்கள் உட்பட, இதுவரை 130க்கும் மேலான குழுக்களைச் சேர்ந்த 6,000க்கும் மேலான பங்கேற்பாளர்கள் ஆய்வகத்தைப் பயன்படுத்தியுள்ளனர். தண்ணீர் சுத்திகரிப்பு செயலியக்க முறை ஜூன் மாதம் பூர்த்தி அடைந்ததைத் தொடர்ந்து, இப்போது இங்கு கழிவறை மற்றும் குளியல் வசதிகள் கிடைக்கின்றன. இதனால், மாணவர்களும் ஆய்வாளர்களும் உபின் தீவில் தங்கியிருந்து ஆய்வு, கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலுகிறது. உபின் கற்சுரங்கத்திலிருந்து எடுக்கப்படும் தண்ணீர், எதிர்மறைச் சவ்வூடு ஆலையில் சுத்திகரிக்கப்பட்டு, கழிவறை கட்டடத்திற்குக் குழாய்வழி செல்கிறது.

சிங்கப்பூரைப் பூர்வீகமாகக் கொண்ட சதுப்புநில மரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் சதுப்புநிலப் பயிர்த் தோட்டம் முழுமை பெற்றிருப்பது மற்றொரு குறிப்பிடத்தக்க மேம்பாடாகும். இங்கு காணப்படும் 34 "உண்மையான" சதுப்புநிலத் தாவரங்களை வருகையாளர்களுக்கு அறிமுகப்படுத்த விவரப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. எதிர்காலச் சதுப்புநிலச் சீராக்கப் பணிகளுக்கான நடவுப்பொருள் காப்பகமாகத் திகழ்ந்து, சிங்கப்பூரின் பல்லுயிரினத்தைப் பாதுகாப்பதில் பயிர்த் தோட்டம் முக்கிய பங்காற்றுகிறது.

Photo credit: Jacky Soh

NATIONAL PARKS | LET'S MAKE SINGAPORE OUR GARDEN

FRIENDS OF UBIN NETWORK

nparksbuzz
Share your love for nature with us at
#nparksbuzz

உபினின் தனித்துவத்தைக் கொண்டாடும் *Pesta Ubin* மற்றும் உபின் தினம்

2017-ல் தொடங்கப்பட்ட Pesta Ubin வருடாந்தர நிகழ்ச்சியில், உபின் தீவின் தொண்டூழியர்களும் பங்காளர்களும் ஒரே சமூகமாக ஒன்றுகூடி, இத்தீவின் காலத்தால் அழியாத அழகையும் இயற்கையையும் கலாசார மரபுடைமையையும் கொண்டாடுகின்றனர். இந்த நான்கு வாரக் கொண்டாட்டத்தின்போது, விழிப்புணர்வூட்டும் விறுவிறுப்பான பல நடவடிக்கைகள் சமூகத்திற்காகச் சமூகத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பொதுமக்கள் கலந்துகொள்ளக்கூடிய இந்நடவடிக்கைகள், உபின் தீவின் வாழ்க்கையைப் பற்றி அறியவும், தீவின் தனித்துவக் கவர்ச்சியை அனுபவிக்கவும், வனவாழ்வினங்களைக் கண்டறியவும் வருகையாளர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன.

இவ்வாண்டு மே 26 முதல் ஜூன் 24 வரை Pesta Ubin நடைபெற்றது. நான்கு வாரங்களில் 50க்கும் மேலான நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அவற்றில் 4,500 பேர் கலந்து கொண்டனர். உபின் தீவின் பல்வேறு அம்சங்களான நிலவனப்பு, மரபுடைமை, கிராமத்து வாழ்க்கை, வெளிப்புற அனுபவம் போன்றவற்றை எடுத்துக்காட்டிய பற்பல நடவடிக்கைகளுக்குச் சுமார் 40 குழுக்கள் ஏற்பாடு செய்திருந்தன. பெரும்பாலான நடவடிக்கைகள் இலவசமாக நடத்தப்பட்டன. குடும்பத்தினர், குறிப்பாகச் சிறுவர்கள் மற்றும் இளையர்கள், குதூகலமாக ஒன்றுகூடி மகிழ முழுநிறைவான கேளிக்கை அங்கங்களை இந்நடவடிக்கைகள் வழங்கின.

Photo credit: Ria Tan

அதே வேளையில், தீவுக்கு வருகை தருவோர் சுற்றுப்புறத்திற்கு உகந்த, சமூகப் பொறுப்புமிக்க முறையில் நடந்து கொள்ள ஊக்குவிக்கும் Ubin Way நன்னடத்தைக் குறியீட்டைக் கடைப்பிடிக்குமாறும் பங்கேற்பாளர்களும் வருகையாளர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். எடுத்துக்காட்டாக, நன்னடத்தைக் குறியீட்டின் ஒரு பகுதியாகக் கழிவுகளைக் குறைத்திட, Pesta Ubin கொண்டாட்டத்தின் WalkRunBike நிகழ்ச்சிக்கு வந்திருந்த 500 பங்கேற்பாளர்களும் சொந்தக் கலன்களைக் கொண்டு வந்து, தேசிய பூங்காக் கழகம் வழங்கிய நீர்த்தொட்டிகளில் தண்ணீர் நிரப்பிக் கொண்டனர்.

Photo credit: Low Kok Sheng

முகாமிட்டுத் தங்குதல், கயாக் படகோட்டுதல், மிதிவண்டி ஓட்டுதல், ஓட்டம், சுத்தப்படுத்தும் நடவடிக்கை போன்ற வெளிப்புற நடவடிக்கைகள் தவிர்த்து, பங்கேற்பாளர்களுக்குத் தனித்துவமான கிராமிய அனுபவத்தை வழங்கும் இரவுநேர நடவடிக்கைகளும் நடத்தப்பட்டன. உபின் மக்களின் வாழ்க்கையையும் Restore Ubin Mangroves (R. U. M.) திட்டத்தையும் ஆராயும் ரேச்சல் குவெக்-கின் 'Ubin Sayang' திரைப்படமும் திரையிடப்பட்டது. Pesta Ubin கொண்டாட்டத்தின் பற்பல நடவடிக்கை கூடங்கள், பயிலரங்குகள், உரை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின்மூலம் வனவாழ்வினப் பாதுகாப்பு பற்றியும் தீவின் இயற்கையான மரபுடைமை பற்றியும் வருகையாளர்கள் கற்றுக்கொள்ள முடிந்தது.

Pesta Ubin கொண்டாட்டத்தின் நிறைவு அங்கமாக உபின் தினம் நடைபெற்றது. வர்த்தகத் தொழில் அமைச்சர் திரு சான் சுன் சிங், சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சரும் தேசிய வளர்ச்சி இரண்டாம் அமைச்சருமான திரு டெஸ்மண்ட் லீ ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு வருகை அளித்தனர். கல்வி மற்றும் ஆய்வுக்காக ஈராண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்ட Ubin Living Lab ஆய்வகத்தின் மேம்படுத்தப்பட்ட வசதிகளை இரு அமைச்சர்களும் திறந்து வைத்தனர். சிங்கப்பூரைப் பூர்வீகமாகக் கொண்ட 34 சதுப்புநிலத் தாவரங்களின் திரட்டைக் கொண்ட புதிய சதுப்புநிலப் பயிர்த் தோட்டத்திற்கும் அவர்கள் வருகையளித்தனர்.

தேசிய பூங்காக் கழகமும் ஆய்வுச் சமூகமும் சென்ற ஆண்டு நடத்திய ஆய்வுகளின்போது உபின் தீவில் கண்டறியப்பட்ட ஐந்து புதுவகை உயிரினங்களையும் உபின் தினத்தன்று அமைச்சர் டெஸ்மண்ட் லீ அறிவித்தார். புதிதாகக் கண்டறியப்பட்ட உயிரினங்கள் Little Stint கடலோரப் பறவை, Long-winged Tomb வௌவால், Big-eared Pipistrelle வௌவால், Arrow Emperor தும்பி மற்றும் Raccoon Pseudo-orb Weaver எட்டுக்கால்பூச்சி.

Photo credit: Jacky Soh

Photo credit: Boo Shi

உபின் தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 'Bin Kiang: Our Heart and Soul' என்ற தலைப்பிலான சீனப் புத்தகம் வெளியிடப்பட்டது. சமூகத்தினரால் தயாரிக்கப்பட்ட இப்புத்தகம், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உபின் தீவில் வாழ்ந்து வரும் கிராமவாசிகளின் கதைகளைத் தொகுத்தளிக்கிறது. புத்தகத்தை வெளியிட்ட அமைச்சர் டெஸ்மண்ட் லீ, உபினின் முன்னான் மற்றும் இந்நாள் கிராமவாசிகளுக்குப் புத்தகங்களை வழங்கினார்.

Join us next year for Pesta Ubin, from 27 May to 23 June 2019!

"ஆ மா" பானக் கடை சீரமைப்பு

படம்: சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்

லாய் ஹுவாட் சோ என்றும் அழைக்கப்படும் 80 வயது திருவாட்டி ஓங் ஆ சாம், ஒவ்வொரு வார இறுதியிலும் தாகத்தால் தவிக்கும் சைக்கிளோட்டிகளுக்கும் மற்ற பகல்நேர வருகையாளர்களுக்கும் ஜெலுடொங் பாலத்தில் பானங்கள் விற்கிறார். பல ஆண்டுகளாக அவர் நடத்தி வரும் பிரபலமான "ஆ மா" பானக் கடை, சீர்குலைந்த நிலையில் இருந்தது.

உபின் தீவை அதன் நாட்டுப்புற இயல்புடன் புதுப்பிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை பிரிவு, சிங்கப்பூர் மரபுடைமை சங்கம், Sea Angel அமைப்பு ஆகியன தேசிய பூங்காக் கழகம், தேசிய வளர்ச்சி அமைச்சு ஆகியவற்றுடன் கூட்டிணைந்து, "ஆ மா" பானக் கடையைச் சீரமைத்தன.

இணைப் பேராசிரியர் டான் பெங் கியாங்கின் வழிகாட்டுதலின்கீழ், பல்வேறு பங்காளர்களின் கருத்துகளைக் கவனத்தில் கொண்டு, பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை பிரிவு மாணவர்கள் புதிய கடையை வடிவமைத்தனர். உணர்வுபூர்வமான, பாரம்பரிய மதிப்புமிக்க அம்சங்களையும் பயன்பாட்டாளர்களின் தேவைகளையும் புதிய வடிவமைப்பு உள்ளடக்கியது. திருவாட்டி ஓங்கின் காலஞ்சென்ற கணவர் செய்திருந்த பெயர்ப்பலகைகள், பார்வையில் படும்படி கடையில் ஆங்காங்கே பொருத்தப்பட்டன. கடையின் இட அமைப்புமுறையும், தூண்களும், கூர்முனை கூரையும் தக்க வைக்கப்பட்டன. மரப் பலகைகள் கூடுமானவரை மறுபயனீடு செய்யப்பட்டன. அலையேற்றமுள்ள சதுப்புநில ஆற்றுக்குப் பக்கத்தில் கடை அமைந்திருந்ததால், தரைமட்டம் உயர்த்தப்பட்டு, வெள்ளத்தைத் தவிர்க்க பலகை மேடை அமைக்கப்பட்டது.

> "ஆ மா பானக் கடையின் சீரமைப்புப் பயணம் நுண்ணறிவை வளர்த்துக்கொள்ள துணை புரிந்தது. பலகையைக் கட்டுமானப் பொருளாகப் பயன்படுத்துவதிலுள்ள நுணுக்கங்களை எங்களால் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிந்தது. சிங்கப்பூரிலிருக்கும் கடைசி கிராமமான உபின் தீவின் இயற்கை மரபுடைமையைக் கட்டிக்காக்கும் முனைப்பில் பங்களிக்க வாய்ப்பு கிடைத்ததை பாக்கியமாகக் கருதுகிறேன்."

ஜுவோ யூச்சென், முதலாண்டு மாணவர்

படம்: சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம்

> "கடையின் இரண்டு மாதகாலக் கட்டுமானப் பணியின்போது, குறிப்பாக உபின் குடியிருப்பாளர்களுடன் சேர்ந்து செயல்படும்போது, பல இனிய நினைவுகள் கிடைத்தன."

ஜாங் யீயுவே, முதலாண்டு மாணவர்

புதிய அடிக்கல் இடும் பணியையும் முக்கிய கட்டட அமைப்புமுறை பணிகளையும் தேசிய பூங்காக் கழகம் மேற்கொண்டாலும், மீதியிருந்த மற்ற கட்டுமானப் பணிகளை மாணவர்கள் மேற்கொண்டனர். Sea Angel அமைப்பின் பிலிப் லிம் அளித்த வழிகாட்டுதலின்கீழ், கிராமவாசிகளின் உதவியுடன் பாரம்பரிய பலகை கட்டுமான முறைகளை மாணவர்கள் பயன்படுத்தினார்கள். கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பல்வேறு அரசாங்க அமைப்புகளிடம் அங்கீகாரம் பெறுவதற்கு தேசிய வளர்ச்சி அமைச்சும் பூங்காக் கழகமும் துணை புரிந்தன. PH Consulting Pte Ltd நிறுவனம் இலவசப் பொறியியல் சேவைகளை வழங்கியது. கடையின் மறுகட்டுமானத்தையும் இப்பகுதியின் வரலாற்றையும் எடுத்துக்கூறும் 16 ஏடுகள் கொண்ட பரபுடைமைச் சுவரும் அமைக்கப்பட்டது. இப்பகுதியின் இயற்கை மரபுடைமையை Restore Ubin Mangroves (R.U.M.) அமைப்பு எடுத்துக்காட்டியுள்ளது.

இரண்டு மாதக் கட்டுமானப் பணிக்குப் பிறகு "ஆ மா" பானக் கடை ஜூலை மாதத் தொடக்கத்தில் முழுமையடைந்து, 23 செப்டம்பர் 2018 அன்று அதிகாரபூர்வமாக மீண்டும் திறக்கப்பட்டது.

படம்: ஜுஹாரி

> "இந்த முனைப்பினால் கடை சீரமைக்கப்பட்டதோடு, உபின் குடியிருப்பாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட குழுக்களுக்கும் இடையில் ஒத்துழைப்புணர்வும் உருவாகியிருப்பதை நான் உணர்கிறேன்."

சிம் வென் வெய், இரண்டாம் ஆண்டு மாணவர்